முடிவுத் திகதி – **2026.02.11**

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

## <u>வெற்றிடங்கள்</u>

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கீழ் குறிப்பிடப்படும் **திட்டங்களின் திட்டப் பணிப்பாளர் மற்றும் பிரதி திட்டப் பணிப்பாளர்** பதவிகளுக்காக அரச, பகுதியளவு அரச மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தர உத்தியோகத்தரகள் உட்பட அனைத்து இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த நியமனங்கள் நிதி அமைச்சினால் 2019.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

| **கருத்திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் பெறுமதி ( அ.டொலர் மில்லியன்)** | **பதவியின் பெயர்** | **வெற்றிடங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மத்திய அதிவேக திட்டம் - கட்டம் III (CEP III) | 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை வகுதி | திட்டப் பணிப்பாளர் | **01** |
| துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை திட்டம் (PAEHP) | | திட்டப் பணிப்பாளர் | **01** |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை, இணைப்பு 01 இன் பிரகாரம், திட்டப் பணிப்பாளர் (PS 1) (250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை வகுதி ) அடிப்படைத் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

திட்டப் பணிப்பாளர் (PS 1) பதவிக்கு தேவையான தகுதிகள்

**குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் அனுபவம் [கீழே(I) (II)அல்லது (III)]**

**I.** 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை / அதனையொத்த தொழிற் தகைமை

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தகுதி பெற்ற பின்னர் குறைந்தது 16 ஆண்டுகள் அனுபவம். அவற்றில் 08 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும்.

**II.** 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை / அதனையொத்த தொழிற் தகைமை

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கூட்டுறவு /பட்டய உறுப்புரிமை அல்லது ஒத்த தொழில்முறை தகைமை அல்லது சம்பந்தப்பட்ட துறையில் ஒரு பட்டப் பின்படிப்பு பட்டம்.

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தகுதி பெற்ற பின்னர் குறைந்தது 14 ஆண்டுகள் அனுபவம் . அவற்றில் 07 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும்.

**III.** 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம்

அத்துடன்

ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கூட்டுறவு /பட்டய உறுப்புரிமை அல்லது அதுபோன்ற தொழில்முறை தகுதி.

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தகுதி பெற்ற பின்னர் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம் . அவற்றில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும்.

---

குறிப்பு

- **தொடர்புடைய துறை என்பது "சிவில் பொறியியல் துறை " என்பதைக் குறிக்கிறது , மேலும் அனுபவமும் தொடர்புடைய துறையில் இருக்க வேண்டும்**

---

<u>**பொதுவான நிபந்தனைகள்:**</u>

- ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் 2019.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.
- தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.
- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு , தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால் , ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டால், அந்தப் பகுதியிலும் மற்றும்/அல்லது நாட்டில் எந்த இடத்திலும் பணிபுரிய இணங்க வேண்டும்.

**01. வயது வரம்பு:**

- வீதி அபிவிருத்தி அதிகார சபை/ அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு 64 வயதிற்கு கீழ்

**02 சம்பளம்:**

- சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

**03. வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது , ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கானது. சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையில் சேவை நீடிப்பு கருத்திற்கொள்ளப்படலாம்.

- விண்ணப்பதாரர் ஏற்கனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தரப் பதவியை வகித்தால், நியமனம் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள , நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

- விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் , மற்றும் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

- நியமனங்களை வழங்குதல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.

**04. நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை / அரச அல்லது பகுதியளவு அரச துறையில் ஏற்கனவே நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் ஒரு விண்ணப்பதாரர், அவர்களின் நிறுவனத் தலைவர் மூலமாகவும், 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பத்தி 2.3.3 இன் படி , அப்பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரத்துடனும் , விடுவிப்பு அடிப்படையில் பரிந்துரையுடனும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் . (இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

## 05. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் , கல்வித் தகுதிகள், பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் , கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு , பரிந்துரையுடன் நிறுவனத்தின் தலைவர் மூலம் (ஏற்புடையதாயின்) பதிவுத் தபாலில் , செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு , " மகனெகும மகமெதுர ", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2026.02.11 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

## 06. விசேட கவனத்திற்கு

- **தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்**
- **மேற்கண்ட பதவிகளுக்கு 2025.10.10 மற்றும் 2025.10.07 தேதியிட்ட முந்தைய விளம்பரங்களுக்கு பதிலளிக்கும் விதமாக ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.**

விண்ணப்ப மாதிரி - இணைப்பு

மேலதிக விபரங்களுக்கு – 0112271048

**செயலாளர்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**